## கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# ஒரு மாத கால உணவு வழங்கும் நிகழ்ச்சி! அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் துவக்கி வைக்கிறார்!

### திருத்தணி எஸ்.சந்திரன் தலைமை – வி.ஜி.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை! டி.ஆர். திலீபன் ஏற்பாடு!

திருவள்ளூர் மார்ச் 01-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாதம் முழுவதும் அறுசுவை உணவு தொடக்க விழா மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறுகிறது

சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் நகர்மன்ற தலைவர் சி.சு. ரவிச்சந்திரன் நகர்மன்ற துணைத்தலைவர் உதயமலர் பாண்டியன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தா.மோதிலால், டி.எம். சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.ஆர்.திலீபன் வரவேற்பு உரை ஆற்றுகிறார் இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு உணவு வழங்கும் துவக்க விழாவை தொடங்கி வைக்கிறார் இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி மாவட்ட மாநில கழக நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர். டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், மாஸ்டர் குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரி ரவிந்திரநாத் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் திருவள்ளூர் நகரக் கழக நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள் முடிவில் நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.பவளவண்ணன் நன்றி கூறுகிறார்.

## க.கோவிந்தராஜ் தலைமை ! ஐட்ரீம் இரா.மூர்த்தி – இரா.செந்தில்குமார் முன்னிலை !

# 51வது வட்ட தி.மு.க. சார்பில் தலைவர் பிறந்தநாள்! இனிப்பு!

### ஆர்.டி.சேகர் வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை மார்ச்.01

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட திமுக சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னட்டு கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி இன்று (01.03.2025 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் ஜே.பி.கோயில் தெரு சந்திப்பில் சஞ்சீவிராயன் கோவில் அருகில் நடைபெறுகிறது.

இதில் வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகிக்கிறார். இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் கலந்து கொண்டு கழக கொடியேற்றி இனிப்பு வழங்குகிறார். டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, பங்கேற்று சிறப்பிக்கிறார்.

மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

வட்ட பொருளாளர் ஜி.உமாபதி நன்றி கூறுகிறார்.

## க.ஜெயராமன் – இரா.நரேந்திரன் பங்கேற்பு! த.ஆறுமுகம் தலைமை!

# பெரம்பூர் 44வது வட்டத்தில் அறுசுவை உணவு!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, மார்ச். 1-

திராவிட மாடல் நாயகர்!எல்லோருக்கும் எல்லாம்!வழங்கி வரும், கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு தளபதி அவர்களின் 72- ஆம் பிறந்த நாள் விழா, சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 44-வது வட்டக் கழகம் சார்பில், 01.03.2025 அன்று காலை 7.00 மணிக்கு, மேல்பட்டி பொன்னப்பன் தெரு-பழனி ஆண்டவர் கோயில் தெரு சந்திப்பில் வட்டச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் தலைமையில், சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்குக் காலைச் சிற்றுண்டியும் இனிப்பும் வழங்கும் நிகழ்ச்சியாக நடைபெற உள்ளது.இந்நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், மாநிலப் பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. நரேந்திரன், மாவட்டப் பொருளாளர் வி.தயாளன், திருமதி.சர்ப ஜெயதாஸ் எம்.சி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ். ஆர்.கமலக்கண்ணன், நா. சேகர், பகுதித் தலைவர் எஸ்.சாகுல் அமீது, பகுதித் துணைச் செயலாளர் திருமதி.ஜோதிமணி ராதாகிருட்டிணன், மாவட்டப் பிரதிநிதிகள் கி.ராஜி, பி. சண்முகம், இரா. முரளிதரன், கு.பரத், அணிகளின் அமைப்பாளர்கள் கோ.ராதாகிருட்டிணன், கோ.சதீஸ், எஸ்.கார்த்திகேயன், ஜி.பி.மோகன் பாபு, ஜி.பி.சிவகுமார், பில்டர் பி.ரவி, எம். தமிழ்செல்வன், பி. பிரேம் குமார், வட்ட நிர்வாகிகள் வி.மணி, பி.வினோத், நா.தட்சிணாமூர்த்தி, ஜெ.கோமதி, கோ.பொன்னிவளவன், ப.பிரதீப், புல்லட் பி.கிருட்டிணன், பூ. வேல்முருகன், மற்றும் பாக முகவர்கள், பாகப் பணிக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

## மார்ச் 1 – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# சோழிங்கநல்லூர் மத்திய பகுதியில் தொடர் நிகழ்ச்சிகள்!

### பகுதி செயலாளர் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, மார்ச் 1 -

தலைவர் பிறந்தநாள் குறித்து ச.அரவிந்த்ரமேஷ் அறிவிப்பு வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு

1. 189வது வட்டச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் வ.பாபு. தலைமையில் பள்ளிக்கரணை வார்டு அலுவலகம் அருகில் கழக கொடி ஏற்றி 300 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல்.

2. சோழிங்கநல்லூர் மத்திய பகுதி துணை செயலாளர் வே.வீ.குமரேசன் தலைமையில் அலுவலகம் கழக கொடி ஏற்றி 300 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல்.

3. 190வது வட்ட செயலாளர் ஆரோன் (எ) அரசு அவர்களின் ஏற்பாட்டில் பள்ளிக்கரணை பகுதியில் 02/03/2025 அன்று கழக கொடி ஏற்றி 1000 நபர்களுக்கு பிரியாணி மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மருத்துவ முகாம்.

4. 190வது வட்டப் பொருளாளர் திருமலை அவர்களின் ஏற்பாட்டில் பள்ளிக்கரணை எபினேசர் தெருவில் கழக கொடி ஏற்றி அறுசுவை உணவு வழங்குதல்.

5. 191வது வட்டச் செயலாளர் G.ரவி தலைமையில் பல்லவன் நகர் ஜல்லடியான் பேட்டை பகுதியில் கழக கொடி ஏற்றி பிரியாணி வழங்குதல்.

6. 197வது வட்டச் செயலாளர் T.ராஜேந்திரன் தலைமையில் உத்தண்டி மற்றும் பனையூர் பகுதிகளில் கழக கொடி ஏற்றி பிரியாணி வழங்குதல்.

7. 198வது வட்டச் செயலாளர் பா.தேவகுமார் தலைமையில் காரப்பாக்கம் கங்கை அம்மன் கோவில் அருகில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல் மற்றும் மாலை7.30 மணியளவில் காரப்பாக்கம் ஈஸ்வரன் சாலையில் அமைந்துள்ள ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில் அசைவ உணவு வழங்குதல்.

8. மாவட்ட பிரதிநிதி S.R.உமாபதி ஏற்பாட்டில் சோழிங்கநல்லூர் சிக்னல் அருகில் கழக கொடி ஏற்றி 600 நபர்களுக்கு பிரியாணி வழங்குதல்.

9. 199வது வட்டச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் G.சங்கர்.MC தலைமையில் சோழிங்கநல்லூர் எம்.ஜி.ஆர் தெரு, பரமேஸ்வரன் நகர், infosis மார்க்கெட் காந்திநகர் ஆகிய பகுதிகளில் கழக கொடி ஏற்றி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல்.

10. 200வது வட்டச் செயலாளர் R.நாகராஜ் தலைமையில் செம்மஞ்சேரி OMR சாலையில் கழக கொடி ஏற்றி அறுசுவை உணவு வழங்குதல் அதனை தொடர்ந்து சுனாமி குடியிருப்பில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு பிரியாணி வழங்குதல். மேலும் பொதுமக்கள் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்குதல்.

மேற்கண்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளரும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான ச.அரவிந்த்ரமேஷ் வேண்டுகொள் விடுத்துள்ளார்.

## முதல்வர் பிறந்தநாள்!

# 130 ‘அ’ வட்டத்தில் கொடியேற்றி மன்றப் பலகை திறப்பு!

### வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 1-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி 130 அ வட்டத்தில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைபடியும் தியாகராயர் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. மற்றும் தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோரின் அறிவுறுத்தலின் படியும் தமிழக முதல்வர் சமூக நீதி காவலர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு 130 அ வட்ட செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில் காலை 9 மணி அளவில் ராஜாங்கம் மத்திய வீதியில் பகுதி பிரதிநிதி அ.ஜான் பீட்டர் அவர்களின் ஏற்பாட்டில் கழக கொடியேற்றி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற பலகை திறப்பு விழாவும் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து பாகம் 1 திருநகர் முதல் தெருவில் வட்ட பொருளாளர் என்.லோகேஷ் அவர்கள் ஏற்பாட்டில் கழக கழக கொடியேற்றி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வட்ட கிளை நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்ட செயலாளர் தட்சன் ஹரிஹரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## க.சுகுமாரன் தலைமை! கூ.பீ.ஜெயின் எம்.சி. முன்னிலையில்

# வில்லிவாக்கம் 94 (அ) வட்டத்தில் கழகக் கொடியேற்றி - அறுசுவை உணவு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச். 1

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம்,வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 94 (ஆ) வட்ட தி.மு.க. சார்பில் வடக்கு ரெட்ஹில்ஸ் ரோடு ஜிம் அருகில் கழகக் கொடியேற்றி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி வட்டக் கழகச் செயலாளர் க. சுகுமாரன் தலைமையில் வில்லிவாக்கம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர், 8 மண்டலக்குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் முன்னிலையில் கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வில்லிவாக்கம் சட்டமன்றத் உறுப்பினர் அ.வெற்றிஅழகன் ஆகியோர் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வில்லிவாக்கம் சட்டமன்ற தேர்தல் பார்வையாளர் ஓ.ஏ.நாகலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், 95 வது மாமன்ற உறுப்பினர் சுதா தீனதயாளன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்

ஜி.ஜெ.பிரபு, பகுதி நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா. இளையா, கலைச்செல்வி, மனோகரன், ஐ.சி.எப்.மு. சுரேஷ் பாபு, மாவட்டப் பிரதிநிதி மா.சுந்தர்எபி, வட்டக் கழக நிர்வாகிகள் கோ.வி.சண்முகம், மோ. கார்த்திக், ஆர்.கருவேப்பிலை, செல்வம், இசைமணி, எபினேசர், பா. மகேஷ்வரன், வெ.ரமேஷ் பாபு, பி.ஜெ.நாகராஜ், எஸ். ஆர்.மூர்த்தி, தே.குட்டி பிரபாகரன், ஆதிக்குமார் மற்றும் பாகமுகவர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

## டாக்டர் கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் கழகத் தலைவர் பிறந்தநாள்! கழக கொடியேற்றி இனிப்பு உணவு !

### ஆர்.டி.சேகர் வழங்குகிறார்! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் அறிக்கை!

சென்னை மார்ச்.01

ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (01.03.2025 சனிக்கிழமை) நிகழ்ச்சிகள் வருமாறு :

1. ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் கழக கொடி ஏற்றியும், உறுதி மொழி ஏற்றும், மக்களவை மறுசீரமைப்பு குறித்து எடுத்துரைத்தும், இனிப்புகள் வழங்கப்படுகின்றது.

2. பகுதி பிரதிநிதியும் மன்ற செயலாளர் என். லோகநாதன் ஏற்பாட்டில் பிரியாணி காலை 11.00 மணியளவில் நேருநகர் மக்கள் மன்றம் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு கழக கொடியேற்றி இனிப்பும், உணவும் வழங்குகிறார். டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் அறிக்கை விடுத்துள்ளார்.

## பிரபாகராஜா எம்.எல்.ஏ. – நாமக்கல் ராணி – யாழினி – கே.கண்ணன் பங்கேற்பு

# சென்னை தெற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி சார்பாக 500 நபர்களுக்கு உணவு!

### மாவட்ட அமைப்பாளர் நிஷா சையத் அறிக்கை!

சென்னை, மார்ச் 1 -

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137வது ஆ வட்ட கழகத்தில் புகழேந்தி தெரு தொடர்ச்சியில் இன்று 01.03.2025 சனிக்கிழமை காலை 12 மணிக்கு புகழேந்தி தெரு தொடர்ச்சி அருகே கொடியேற்றி இனிப்புகள் வழங்கி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்படவுள்ளது

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகராஜா, மகளிர் தொண்டரணி மாநில அமைப்பாளர் நாமக்கல் ராணி , மாநில சமூக வலைதள பொறுப்பாளர் யாழினி , கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் கே.கண்ணன் விருகம்பாக்கம் பொறுப்பாளர் வி.உமாகாந்த் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ்,பி எஸ் முருகேசன், எஸ் டி தங்கராஜ், மாவட்டத்துணை செயலாளர் வாசுகிப்பண்டியன் பகுதிகழக நிர்வாகிகள் எஸ்.உமாபதி,அஜந்தா ரவி,பாபு,தியாகு மாவட்ட அமைப்பாளர் ஆர்.சசிகுமார், பகுதி தொண்டரணி அமைப்பாளர் பி.சுதா ஆகியோர் கலந்துகொல்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் துணை தலைவர் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மகளிர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் நிஷா சையத் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கழக பொதுக்குழு உறுப்பினர்

# சைதை சம்பத் மறைவு!

### இன்று மாலை உடல் அடக்கம்!



சென்னை, மார்ச் 1 -

கழக பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்ததும் கழகத்தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜா சம்பத்தின் தந்தையும் கழக பொதுக்குழு உறுப்பினரும் சைதைப் பகுதிக் கழக முன்னோடியும் முன்னாள் டி.யு.சி.எஸ். தலைவருமான சைதை சம்பத் நேற்று (28.2.2025) பகல் 1 மணி அளவில் மறைவெய்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (1.3.2025 சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்குமேல்

எண். 16/48, சூடியம்மன் தெரு, சைதாப்பேட்டை, சென்னை15. எனும் முகவரியில் இருந்து கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

தகவல் அறிந்ததும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், தலைமச் செயற்குழு உறுப்பினர் துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.குணசேகரன், மின்னல் கந்தப்பன், எம். ஸ்ரீதரன் உள்ளிட்ட வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பலகுரலரசு ‘மிசா’ முருகுபாண்டியன்**

**மார்ச் 1 (2016)**



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் ‘உதயசூரியன் நாடக மன்ற’த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு “பலகுரலரசு” எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இருந்து ஓங்கி ஒலித்த குரல், இந்த பலகுரல் தம்பி முருகுபாண்டியன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**